பக்கங்கள் 19 + 3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 23 புதன்கிழமை 09.10.2024 | அதிர்வு 69

## வைத்தியர் அர்ச்சுனா பிணையில் விடுவிப்பு



(விரிவான செய்தி 4 ஆம் பக்கத்தில்)

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மாவையின் பதவி விலகல் கடிதம் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை

## சசிகலாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை என்றும் தமிழரசின் பதில் பொதுச்செயலர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தலைவர் பதவி உள்ளிட்ட கட்சியில் அவர் வகித்த பொறுப்புக்களிலிருந்து விலகும் கடிதம் எதுவும் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை.” - என்று கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் விடயங்களைக் கையாள்வதற்கான நியமனக் குழு வவுனியாவில் இன்று புதன்கிழமை கூடியது. இதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

02



# நெடுந்தீவுக் கடற்பரப்பில் 21 இந்திய மீனவர்கள் கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் நான்கு படகுகளில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 21 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இன்று புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்களும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

மேற்படி 21 இந்திய மீனவர்களும் நாளை வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.






# யாழில் ‘சங்கு’ வேட்புமனுத் தாக்கல்

(எஸ்.நிதர்ஷன்,
பிரபாகரன் டிலக்சன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று புதன்கிழமை கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனை முதன்மை வேட்பாளராகக் குறிப்பிட்டு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

இன்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் வேட்புமனுவை அவர்கள் தாக்கல் செய்தனர்.

இந்தத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சங்குச் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

கூட்டணி சார்பில் வேட்பாளர்களாக தர்மலிங்கம் சித்தார்த்தன், ஆறுமுகம் கந்தையா பிரேமச்சந்திரன், குருசுவாமி சுரேந்திரன், கனகலிங்கம் சிவாஜிலிங்கம், பாலச்சந்திரன் கஜதீபன், சிங்கபாகு சிவகுமார், சசிகலா ரவிராஜ், சிவநாதன் ரவீந்திரா, ஜெயரத்தினம் ஜெனார்த்தனன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.







## மாவையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழரசுக் கட்சியின் வன்னி தேர்தல் மாவட்டத்தின் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது. நாளை வியாழக்கிழமை காலை இறுதி விபரம் அறிவிக்கப்படும்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் இராஜினாமாக் கடிதம் எதுவும் இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை. அதுபோலவே சசிகலா மற்றும் தவராசா ஆகியோர் கட்சியில் இருந்து வெளியேறினார்கள் என்று ஊடகங்களின் வாயிலாகவே அறியமுடிகின்றது. அவர்களது கடிதமும் இதுவரை கிடைக்கவில்லை. பத்திரிகைகள் ஊடாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று சொல்லப்படுகின்றது. எனவே, இது தொடர்பாக நான் கருத்துக் கூற முடியாது. அவ்வாறான நிலைமை ஏற்படுமாக இருந்தால் கட்சியின் யாப்பின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் இதுவரை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல்களில் மாற்றம் செய்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. கட்சியின் மத்திய குழுவே தேர்தல் நியமனக் குழுவை நியமித்தது. அந்தக் குழுவானது எவ்வாறான அடிப்படையில் வேட்பாளர்களைத் தெரிய வேண்டும் என்று தீர்மானம் எடுத்ததோ அந்த அடிப்படையில் நியமனங்களை வழங்கியிருக்கின்றது.

இம்முறை தேர்தலில் புதியவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் உள்வாங்கப்பட்டுள்ளனர். விண்ணப்பித்த அனைவருக்கும் கொடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைமை எமக்கு உள்ளது.

அத்துடன் இம்முறை தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவது தொடர்பாகவும் மத்திய குழுவில் கதைக்கப்பட்டது. தற்போதைய களநிலவரங்களின் அடிப்படையில் அங்குள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பாக ஆராய்ந்துள்ளோம். அந்த அடிப்படையில் கொழும்பில் இம்முறை தமிழரசுக் கட்சி போட்டியிடாது என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வேறு ஒரு கட்சியூடாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ் தமிழரசுக் கட்சியில் இருந்து முற்றாக வெளியேறாமல் இருக்கும் பட்சத்தில் கட்சியின் யாப்புக்கமைய அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.





# யாழில் தியாக தீபத்தை வழிபட்டு தமிழ் மக்கள் கூட்டணி வேட்புமனு

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

தமிழ் மக்கள் கூட்டணியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்குரிய வேட்புமனுவை இன்று புதன்கிழமை கையளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னாள் யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் தமிழ் மக்கள் கூட்டணி யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனுவை இன்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தனர்.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் கூட்டணியினர், வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னர் வேட்பாளர்கள் யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தியிருந்தனர். அத்துடன் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சிதறு தேங்காய் அடித்தும் வழிபாடு செய்தனர்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் வேட்பாளர்களாக விஸ்வலிங்கம் மணிவண்ணன், வரதராஜன் பார்த்தீபன், தவச்செல்வம் சிற்பரன், முருகானந்தம் யசிந்தன், கதிரேசன் சஜீதரன், பிரான்சிஸ் குலேந்திரன் செல்ரன், அருள்பரன் உமாகரன், நாவலன் கோகிலவாணி, மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் ஆகியோர் களமிறங்குகின்றனர்.









# வைத்தியர் அர்ச்சுனா பிணையில் விடுவிப்பு





(எஸ்.நிதர்ஷன்)

வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுவிக்க சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவை எதிர்வரும் ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் கடந்த 26 ஆம் திகதி உத்தரவிட்டது.

இன்றைய தினம் நகர்த்தல் பத்திரம் மூலம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

வைத்தியர்களைத் தொலைபேசியில் அச்சுறுத்தியமை, பேசித் தொந்தரவு செய்தமை உள்ளிட்ட காரணங்களுக்காக வைத்தியர் அர்ச்சுனா மீது ஏனைய வைத்தியர்களால் தொடரப்பட்ட வழக்குகள் மீதான விசாரணையின்போதே அர்ச்சுனாவுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் மணல் கொள்ளையில் ஈடுபடும் வாகனங்கள் இனிமேல் கறுப்புப் பட்டியலில்

## ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் தீர்மானம்



வடக்கு மாகாணத்தில் சட்டவிரோத மணலைக் கொண்டு சென்ற குற்றத்துக்காக அடையாளப்படுத்தப்படும் வாகனங்களைக் கறுப்புப் பட்டியலில் வைத்து அவர்களுக்கு எதிர்காலத்தில் மணல் விநியோக அனுமதிகளை வழங்காமல் இருப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

கூட்டத்தில் கலந்துகொண்ட பொலிஸார் இரண்டு விடயங்களை முன்வைத்தனர்.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மணல் கொண்டு வருவதாக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுவிட்டு, கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவில் உள்ளூரிலிருந்து மணலை ஏற்றிவிட்டு அனுமதிப் பத்திரத்துக்கு அமைவான வீதியால் பயணிக்கும்போது தம்மால் ஒன்றும் செய்ய முடியாமல் இருப்பதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அதைவிட, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஒரு நாளில் அந்த அனுமதிப் பத்திரத்தை வைத்து பல தடவைகள் மணலை ஏற்றிப் பறிக்கின்றனர். இதன் காரணமாகவே மணலுடன் செல்லும் வாகனங்கள் வேகமாகச் செல்கின்றன என்பதையும் பொலிஸார் குறிப்பிட்டனர். இதற்கு மேலதிகமாக, போலியான அனுமதிப்பத்திரங்களையும் தயாரிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்குத் தீர்வாக, மணல் அனுமதிப் பத்திரத்தில் 'க்யூஆர்' முறைமையைக் கொண்டு வந்து பொலிஸார் பரிசோதிப்பதற்கு ஏதுவாக அதனைச் செயற்படுத்தும் முறைமை பரிந்துரைக்கப்பட்டது.

மேலும், நீதிமன்றங்களால் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்டதாக அடையாளப்படுத்தப்படும் வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பது என்றும், அந்த வாகனங்களுக்கு ஒருபோதும் மணல் விநியோக அனுமதிப்பத்திரம் வழங்குவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு மாகாணத்தில் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றைய மாவட்டத்துக்கு மணல் கொண்டு செல்லப்படுவதானால் எதிர்காலத்தில் இரண்டு மாவட்ட செயலர்களுக்கும் அது தெரியப்படுத்தவேண்டும் என்றும், அவை என்ன நோக்கத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றன என்பதும் அறிவிக்கப்படவேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.




# வன்னியில் ஜனநாயக இடதுசாரி முன்னணி வேட்புமனு

**(கி.வசந்தன்)**

வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை ஜனநாயக இடதுசாரி முன்னணி இன்று புதன்கிழமை தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளும் இணைந்து தேர்தலில் போட்டியிடுகின்றன.

இதனையடுத்து வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் இன்று வேட்புமனுவை முன்னணியினர் தாக்கல் செய்த்தனர்.

இதன்போது வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.



# பல இலட்சம் ரூபா பணத்தை வீதியில் எறிந்த நபர் கைது!

பல இலட்சம் ரூபா பணத்தை வீதியில் எறிந்த குற்றச்சாட்டில் யாழ். வட்டுக்கோட்டை பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அராலியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு தொகைப் பணத்தை அவர் தீயிட்டு எரித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சந்தேகநபரின் மனைவி வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சீனக் கப்பல் தரும் செய்தி

பக்கத்தில் இலங்கையில் பொறுப்பேற்றிருக்கும் இடதுசாரி அரசு எத்தகைய நெருக்கடி மிகுந்தது - தீர்க்கமான போக்குக் கொண்டது - என்பது புதுடில்லிக்கு அந்த அரசின் ஆரம்ப நடவடிக்கைகள் மூலமே இப்போது புலப்படத் தொடங்கிவிட்டது எனக் கருதலாம்.

புதிய ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்க இந்தப் பதவிக்கான தேர்தலில் வெற்றி பெற முன்னரே, அரசியல் காற்று அவருக்குச் சார்பாக வீசுவதை உணர்ந்து கொண்டு, அவரைத் தாஜா பண்ணி சமாளித்துத் தன் வலையில் வீழ்த்தும் நோக்கோடு, அவருக்கு நேரத்தோடு அழைப்பு அனுப்பி, கவனித்து, புதுடில்லியில் உபசரித்து, உரையாடி, கையாண்டிருந்தது மோடி அரசு.

அவர் பதவியேற்றதும் அவருக்கு வாழ்த்து அனுப்பி, அவரை புதுடில்லிக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தும் இருந்தது. ஆயினும் நாட்டில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அந்த அழைப்பை இலங்கையின் புதிய ஜனாதிபதி ஏற்க முடியாத சூழல் இருந்தமையால், தனது வெளிவிவகார அமைச்சரைக் கொழும்புக்கு அனுப்பி, அவரோடு ஊடாட்டத்தை நெருக்கமாக - சிநேகபூர்வமாக - புரிந்துணர்வு மிக்கதாக - ஆரம்பிக்க இந்தியா முயன்றது.

ஆயினும், தமது வழி தனி வழி என்பதை அநுரகுமார திஸாநாயக்கவின் அரசு தன் நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டது. அதன் தாற்பரியம் இப்போது புதுடில்லிக்கு மெல்ல மெல்லப் புரியத் தொடங்கி இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

சீனச் சார்பு போக்குக் கொண்ட தேசிய மக்கள் முன்னணி அரசு தனது புவியியல் சூழமைவில் சீனா பக்கம் அதிகம் இணங்கி, புதுடில்லிக்கு விரும்பாத போக்கில் பயணிக்கலாம் என்ற அச்சம் புதுடில்லிக்கும் அந்த நாட்டின் அரசியல் நோக்கர்களுக்கும் இருந்து வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

கொழும்பில் புதிய ஆட்சி பதவியேற்று குறுகிய காலத்துக்குள் சீன இராணுவப் பயிற்சி கப்பல் ஒன்றுக்கு கொழும்பில் தரித்து செல்லும் வரவேற்பு வழங்கப்பட்டிருக்கின்றமை புதுடில்லிக்குப் புதிய செய்தியை உணர்த்தும் என்பதை இலகுவாக ஊகிக்கலாம்.

சீனப் பாய்மரப் பயிற்சிப் போர்க்கப்பலான 'போ லாங்' உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. அதனை இலங்கைக் கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

'போ லாங்' ஆக 86 மீட்டர் நீளமுள்ள பாய்மரப் பயிற்சிக் கப்பல்தான். அத்தகைய கப்பலின் கொழும்பு வருகை இந்தியா உட்பட எந்த நாட்டினதும் பாதுகாப்புக்கும் நேரடி அச்சுறுத்தலான விடயமே அல்ல. ஆயினும், இந்த அனுமதி பிற்காலத்தில் சீனாவின் அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் வரை, இலங்கைப் பிரதேசத்துக்குள் வந்து, தரித்து, செயற்படுவதற்கான அனுமதி வரையில் விரிவடையலாம் என்பதற்கான கட்டியம் கூறல் என்பதை நாம் புறமொதுக்கி விட முடியாது.

சீன இராணுவப் பயிற்சிக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்றுத் தெரிவித்தார்.

சீனக் கப்பல் யாருடைய தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் இல்லை என்றும், இந்திய, ஜேர்மன் மற்றும் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் ஏற்கனவே இலங்கைத் துறைமுகங்களில் தரித்துச் சென்றுள்ளன எனவும் ஹேரத் கூறுகின்றார்.


'இந்தப் போக்கினால் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படுமா?' என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதற்கு, தேசிய மக்கள் சக்தி அரசு ஒவ்வொரு நாட்டையும் சமமாக நடத்துவதாக ஹேரத் பதிலளித்துள்ளார். அதாவது இந்தியாவுக்கென்று முன்னுரிமை - தனிக் கவனிப்பு - கிடையாது என்பதுதான் இதன் அர்த்தம்.

"நாங்கள் யாரையும் மற்றவர்களை விட சாதகமாக நடத்த மாட்டோம். அணிசேராக் கொள்கையின் அடிப்படை இதுதான்" என்று கூறிய அவர், நாட்டின் தேசிய நலன்களுக்குப் பங்கம் விளைவிக்காத வகையில் எந்த நாடும் இலங்கையை ஆதரிப்பதில் தங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் நாளை வியாழக் கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் எனவும், இலங்கை கடற்படைக்கு அமெரிக்கா கடற்படைக் கப்பலை பரிசாக வழங்கவுள்ளதாகவும் ஹேரத் தெரிவித்தார்.

"தேசிய நலனே எங்கள் முன்னுரிமை. அதன் அடிப்படையில் நாங்கள் அனைவருடனும் ஈடுபடுவோம்" என்றும் அவர் கூறினார்.

அவரின் இந்தக் கூற்று புதுடில்லிக்கு, இனிமேல் கொழும்பைக் கையாள்வது நெருக்கடி மிகுந்தது என்ற செய்தியைத் தெளிவாக உணர்த்தும் என எதிர்பார்க்கலாம்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# தமிழ் மக்களின் எதிர்கால இருப்பை கேலிக் கூத்தாக்கும் தமிழ் கட்சிகள்!

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் சிவகரன்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழ்த் தேசிய அரசியலை இனி எவராலும் காப்பாற்ற கூடிய வகையில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தலைவர்கள் எவரும் தென்படவில்லை என்பதே பொய்யின் நிழல்படாத உண்மை என்று தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக இன்று (09) ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

தலைமையற்ற வெறுமைக்குள் சிக்கித் தவிக்கிறது தமிழினம். உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஐக்கியப்பட்டு குறைந்தபட்சம் தேர்தல் கூட்டாவது அமைத்திருக்கலாம்.

பதவி வெறியாலும் அதிகார திமிராலும் ஆணவச் செருக்காலும் ஆளுக்கு ஆள் தனி வழி சென்று தமிழ்த் தேசியத்தை - இருப்பை கூறு போட கங்கணம் கட்டி நிற்கிறார்கள்.

இன விடுதலை அரசியலை முன்னெடுக்க கிஞ்சித்தும் அறச்சிந்தனை அற்ற பதவி சுகபோகிகள் மீண்டும் தமிழினத்தை கருவறுக்க முனைகிறார்கள்.

சிங்கள தேசம் காலத்துக்கு காலம் தமது இருப்பை தனதாக்க ஒரே நோக்கில் சிந்திக்கிறது தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் ஆளை ஆள் அகற்ற முனைகிறார்கள். உட்கட்சிகளின் ஊசலாட்டம் ஊரே சிரிக்கிறது. இவர்கள் எவரும் இனம் சாந்து சிந்திப்பதாக இல்லை. பல ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் உருப்படியாக எதுவுமே சாதிக்கவில்லை.




தனது சுய இலக்கை மட்டுமே எட்டியுள்ளனர். இந்தத் தேர்தலிலும் போட்டியிட வெட்கம், மானம், ரோசம், சுய கௌரவம், தன்மான மின்றி தேர்தல் களத்துக்கு வருகிறார்கள்.

இவர்களுக்கு எதிராக சிவில் அமைப்புகள் தன்னார்வலர்கள் பரப்புரை மேற்கொள்ள வேண்டும். புதியவர்களில் வல்லவர்களைக் களத்துக்கு அனுப்புங்கள். தமிழ்த் தேசிய உணர்வும் தூய விசுவாசமும் இனப்பற்றும் இரண்டகமற்ற செயற்பாட்டர்களாக உள்ளவர்களை தெரிவு செய்யுங்கள்.

அதிகம் படித்தவர்கள் என்று கூறுபவர்கள் இந்த நாட்டை சீர்குலைத்தது இருக்கிறார்கள் .சட்டத் தரணிகளாலே தமிழர் அரசியல் படு பாதாளத்துக்கு சென்றது தமிழின விரோதிகளான இந்த நாட்டின் இனவாதத்தின் மூல வர்களான ஜே.வி.பியை ஆதரிக்க முனைவது என்பது கடந்த கால வரலாறு எதுவுமே தெரியாத அல்லது வரலாற்றை மறந்து தமிழ்த் தேசியத்ததுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும்.

சிந்தியுங்கள் ஜே.வி.பியை மீட்பர் என கொண்டாட முனையும் இளைய சமூகமே இவர்களின் கடந்த கால வரலாற்றை தேடி படியுங்கள்.

தேசிய மக்கள் சக்தி என்பது வெறும் அரிதாரமே. அவர்களின் சுயம் தேர்தலுக்குப் பின்னர் வெளிப்படும் என்பதை மறந்து விடாதீர்கள். தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்பட வேண்டும். இல்லையேல் பலரது அரசியல் எதிர்காலம் கனவாகவே போய்விடும். குறைந்தபட்சம் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் போட்டித் தவிர்ப்பை மேற்கொள்வது அவசியமாகும்.

தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விகுறிக்குள்ளாகும் தமிழ்த்தேசிய அரசியல் சில சுயநலவாதிகளிடம் சிக்கி சின்னாபின்னமாகி தவிக்கிறது .

கூட்டு ஐக்கியத்தை யே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். பல அணிகளாக பிரிந்து நிற்பதை தமிழ் மக்கள் ரசிக்கவில்லை.

விரக்தியின் உச்சத்தில் உள்ளனர். தனித்தனியாக தேர்தலை சந்திப்பது என்பது முடிவில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலை இனி எவராலும் காப்பாற்றக் கூடிய வகையில் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் தலைவர்கள் எவரும் தென்படவில்லை என்பதே பொய்யின் நிழல்படாத உண்மை.

பல அரசியல் வாதிகளை காலம் காணாமல் போக செய்யப் போகிறது என்பது மட்டும் புலனாகிறது. தமிழ் மக்கள் தேசமாக சிந்திக்கும் சூழலையே தமிழ்த் தேசிய கட்சிகள் இல்லமால் செய்து விட்டனர் என்பது கள யதார்த்தம் புரிந்து கொள்வர்களா?.- என்றுள்ளது.

# சம்மாந்துறையில் குடியிருப்பு பகுதியில் யானை அட்டகாசம்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையில் குடியிருப்புப் பகுதியில் தனியன் யானை ஒன்று திடீரென உட்புகுந்து மக்களின் குடியிருப்புக்களை தாக்கி சேதப்படுத்தியுள்ளது.

இன்று புதன்கிழமை காலை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை தமிழ் பிரிவு 4 - குவாசி நீதிமன்றத்துக்கு முன்பாக உள்ள வீதியில் தனியன் யானை ஒன்று வீட்டுக் காணிகளைச் சேதப்படுத்தியுள்ளது.

கடந்த 2 தினங்களாக தனியன் யானை ஒன்று சம்மாந்துறை நூலகம் குவாஸி நீதிமன்ற பகுதிகளில் அட்டகாசம் செய்து சேதங்களை விளைவித்து வருகிறது என்று பொது மக்கள் அச்ச் தெரிவித்துள்ளனர்.

எனவே, சம்பந்தம்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# இஸ்லாமிக் ரிலீப் குடியிருப்புப் பகுதியில் கழிவு நீர்க் குழிகள், வடிகால் சுத்திகரிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பெரிய நீலாவணை இஸ்லாமிக் ரிலீப் தொடர்மாடி வீட்டுத் தொகுதியின் கழிவு நீர்க் குழிகள் மற்றும் வடிகான்களை சுத்திகரிப்பு செய்யும் நடவடிக்கை இன்று புதன்கிழமை (09) முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் மற்றும் கணக்காளர் ஏ. ஹபீபுல்லாஹ் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சுனாமி அனர்த்தத்தால் வீடு, வாசல்களை இழந்து நீர்க்கதியடைந்த மக்கள் குடியிருக்கும் இவ்வீட்டுத் தொகுதிக்கான கழிவு நீர்க் குழிகள் அடிக்கடி நிரம்பி வழிவதால் துர்நாற்றம் வீசுகிறது. டெங்கு அபாயமும் இந்தப் பகுதியில் அதிகரித்துக் காணப்படுகிறது.

அத்துடன் அந்தப் பகுதியிலுள்ள வடிகான்களும் சீரான நீரோட்டமின்றி காணப்படுகின்றன. இவற்றால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர ஆணையாளர் நௌபீஸ் இன்று புதன்கிழமை (09) கணக்காளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சசிதம் அங்கு கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தார். சுத்திகரிப்பு நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்து அங்கு நின்றவாறே மேற்பார்வையாளர்களையும் ஊழியர்களையும் அழைத்து உரிய வேலைகளை நடத்தினார்.

இதையடுத்து சுத்திகரிப்பு பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு கழிவு நீர்க் குழிகளும் வடிகான்களும் சீரமைக்கப்பட்டுள்ளன.











# மன்னாரில் சாதனையாளர் கௌரவிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையைப் பிரதிநிதித்துவப் படுத்தி சர்வதேச ரீதியாக சாதனை நிகழ்த்திய மாணவர்களைக் கௌர விக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை (09) பாடசாலையின் அதிபர் அருட் சகோதரர் எஸ். சந்தியாகு தலைமையில் இடம்பெற்றது.

இவ்வருடம் சீனாவில் இடம்பெற்ற சர்வதேச கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் சர்வதேச ரீதியில் வெண்கலப் பதக்கம் வென்ற குயின்ரன் ராஜகுமார் கோசல்யன், மலேசியாவில் இடம் பெற்ற யுசிமாஸ் விரைவு கணிதப் போட்டியில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களான சிரோன், செஷான் அதே நேரம் புது டெல்லியில் 40 கழகங்களுடன் இடம்பெற்ற கால் பந்தாட்ட போட்டியில் இலங்கை 17 வயது உதைபந்தாட்ட அணி சார்பாகக் கலந்து கொண்டு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய அந்தோனி தாஸன், கிதுசான், ஆகியோர் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

அதே நேரம் 2023 (2024) ஆம் ஆண்டு நடைபெற்ற கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ சித்திகளைப் பெற்ற பாடசாலையை சேர்ந்த 10 மாணவர்களும் பாடசாலை சமூகத்தினரால் இன்றைய தினம் (09) கௌரவிக்கப்பட்டனர்.

மன்னார் பிரதான பேருந்து நிலையத்தில் இருந்து சாதனை வீரர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாகப் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டு வெற்றி கிண்ணங்கள், சான்றிதழ்கள், பணப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் வலயக் கல்வி பணிப்பாளர் செல்வி ஜி.டி. தேவராஜ், சாதனை மாணவர்களின் பெற்றோர்கள், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக விளையாட்டு அதிகாரி , பழைய மாணவர்கள், ஆசிரியர்கள உட்பட பலர் கலந்து கொண்டனர்,சாதனை நிகழ்த்திய மாணவர்களுக் கான பண பரிசில்களை மன்ஃபுனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.









# மன்னார் சதோச மனிதப் புதைகுழி ‘ஸ்கேன்’ செயற்பாடுகள் ஆரம்பம்

## காணொளி, புகைப்படங்கள் எடுக்க ஊடகங்களுக்குத் தடை

**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகர மையப் பகுதியில் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சதோச மனித புதைகுழி அகழ்வு பணியானது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முதற்கட்டமாக தடய பொருள்களை பிரித்தெடுக்கும் நடவடிக்கை மற்றும் புதைகுழியை சூழ உள்ள பகுதியை ஸ்கேன் மற்றும் அகழ்வு செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் சதோச வளாகத்துக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருந்த பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டடம் அமைந்துள்ள பகுதியிலும் அகழ்வு பணிகள் இன்றைய தினம் (09) ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அகழ்வு பணி தொடர்பான செயற்பாடுகளையோ, ஸ்கான் செயற்பாடுகளையோ புகைப்படம் எடுக்கவோ, காணொளியாக பதிவு செய்யவோ மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவே சதோச மனித புதைகுழி அகழ்வு பணி தொடர்பில் செய்தி சேகரிக்க பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக குறித்த அகழ்வு பணி தொடர்பான உண்மையான விடயங்களை அறிக்கையிடவும் அகழ்வு செயற்பாடுகளை ஆவணப் படுத்தவும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிய நீதிபதியால் தற்போது அகழ்வு பணியையோ அல்லது புதைகுழி தொடர்பிலான ஏனைய செயற்பாடுகளையோ கணொளியோ புகைப்படம் எடுக்கவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அகழ்வு தொடர்பிலும், புதைகுழி வழக்கு தொடர்பிலான செயற்பாடுகள் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணிகள் குரல் பதிவுகளை வழங்க மறுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# கடந்த கால அரசின் நடவடிக்கைகள் மன்னார் மீனவருக்கு அச்சுறுத்தல்!

## உலக மீனவர் சமூகத்தின் செயலாளர் ஹேமன்குமார

**(வாஸ் கூஞ்ஞ)**

கடந்தகால அரசுகள் மன்னாரில் அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொண்ட அபிவிருத்தி திட்டங்களால் மன்னார் மக்கள் குறிப்பாக மன்னார் மீனவ சமூகம் சொல் லொண்ணா துன்பங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று உலக மீனவர் சமூகத்தின் செயலாளர் ஹேமன்குமார தெரிவித்தார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தில் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க் கிழமை (08) மன்னார் நகர கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் உலக மீனவர் சமூகத்தின் செயலாளர் ஹேமன்குமார இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்து ஆராயவும் அவர்களோடு கலந்துரையாடவும் நாங்கள் மன்னாருக்கு வருகை தந்திருக்கிறோம். மன்னார் மக்களிடம் உள்ள பிரச்சினைகள் அநேகமானவற்றை அறிந்து கொண்டோம்.

அதில் முதலாவதாக இந்திய மீனவர்களது இழுவைப் படகு மீனவர் பிரச்சினை, கனிய மணல் எடுக்கும் பிரச்சினை, காற்றாலைகளால் மீனவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சி னைகள், காணிகளைத் திருடி அபகரித்துள்ள பிரச்சினை, இறால் பண்ணைகளால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன னல்கள் போன்ற பிரச்சினைகள் எமக்கு அறிவுறுத்தப்பட்டன.

நாங்கள் மீனவர்களையும் மக்களையும் சந்தித்தோம். அப்போது அவர்கள் தாங்கள் படும் இன்னல்கள் குறித்து எம்மோடு கலந்துரையாடினர். பல வருடங்களாக அவர்கள் பட்டு வரும் துன்பங்களுக்குக் கடந்த கால அரசுகள் எந்த ஒரு தீர்வையும் தரவில்லையென அவர்கள் குறை கூறு கின்றனர்.

புதிய அரசால் ஏதாவது ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் என நம்புகிறார்கள். மற்றும் கனிய மண் அகழ்வால் ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்குவதற்குப் புதிய ஜனாதிபதி ஒரு நல்ல தீர்வை எடுப்பார் என்று தாங்கள் நம்புகின்றனர் என்று கூறினார்கள்.

அத்தோடு அதானி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள 52 காற்றாலைகளையும் அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.

இலங்கைக்கான ஒரு சட்ட வரையறை உண்டு. அதை பாவித்து இந்திய மீனவர்கள் அத்துமீறல்களை அரசு நிறுத்த வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனால் அந்த மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்று குறைபட்டு கொள்கிறார்கள்.

அதானி நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள காற்றாலைகள் காரணமாக மக்கள் படும் துயரத்தை தீர்க்க வேண்டும் என்று அரசிடம் அவர்கள் கேட்டுள்ளனர். விடத்தற் தீவு மற்றும் பேசாலை பகுதிகளில் நீர்நிலை மீன் வளர்த்தல் காரணமாக மக்களுக்கு பெரும் இன்னல்கள் இருப்பதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவற்றுக்காக அநேகமான பனை மரங்களை வெட்டி வீழ்த்தியுள்ளார்கள். இயற்கையை அழித்துள்ளார்கள். இதனால் யதார்த்த வாழ்வுக்கும் சூழலுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பனை மரங்களை அழித்ததால் பெண்கள் செய்து வந்த தொழில் துறை இல்லாமல் ஆகி வாழ்வாதாரம் இல்லாமற் போயுள்ளது. இதனால் பெண்களின் வருமானத்தில் ஒன்றரை லட்சம் ரூபா அளவு வருடம் ஒன்றுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

போருக்கு பின்னான வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் இப்படியான பிரச்சினைகளால் அவர்களின் மீண்டு வர முடியாமல் இருக்கிறது எனக் கவலை தெரிவிக்கிறார்கள். அதிலிருந்து மீண்டு வருவதற்கு இயற்கையான நிலவரங்கள் உருவானால் மட்டுமே தம்மால் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

எனவே இவற்றைத் தீர்த்து வைக்குமாறு நாங்கள் அரசிடம் முறையிடவுள்ளோம். - என்றார்.

குறித்த கலந்துரையாடலில், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மற்றும் மீனவ சமூகத்தினர் என 50 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.






# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 10 ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு!

(எம்.வை. அமீர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்மாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிபீடம் ஏற்பாடு செய்திருந்த டிஜிட்டல் சகாப்தத்தில் நிலையான வளர்ச்சியை நோக்கி அரபு மற்றும் இஸ்லாமிய கல்வி எனும் தொனிப்பொருளிலான சர்வதேச ஆய்வு மாநாடு பல்கலைக்கழகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் நேற்று (08) இடம்பெற்றது.

இஸ்மாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிபீடத்தின் பீடாதிபதியும் ஆய்வரங்கின் தலைவருமான அஷ் செய்க் எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டார்.

கலாநிதி எப். எச்.ஏ. சிப்லியின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த நிகழ்வுக்கு பிரதான பேச்சாளராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் மனிதநேயம் மற்றும் சமூக அறிவியல் நிலைக் குழுவின் தலைவருமான சிரேஷ்ட பேராசிரியர் பிரேமகுமார டி சில்வா கலந்து கொண்டார்.

ஆய்வரங்குக்கு கௌரவ அதிதியாக சவூதி அரேபியாவின் றியாத்தில் உள்ள இமாம் மஹ்மூத் பின் சஹூத் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி சாட் பின் சஹூத் ஐடா அல் கர்ணி பங்கு கொள்ள இருந்தார்.

தவிர்க்கமுடியாத காரணத்தால் அவர் பங்குகொள்ளாததால் அவரது செய்தியை இஸ்லாமிய கற்கைகள் துறையின் தலைவர் கலாநிதி எஸ்.எம்.எம். நபீஸ் வாசித்தார்.

இந்த ஆய்வரங்கில் 65 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

நிகழ்வின்போது பீடாதிபதிகளான பேராசிரியர் எம்.எம். பாஸில், பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, பேராசிரியர் எம்.ஏ.எல். அப்துல் ஹலிம், பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், நூலகர் எம்.எம். றிபாவுடீன், பல்கலைக்கழக வேலைப் பகுதி பொறியலாளர் எம்.எஸ்.எம். பஸில், சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.எச். நபார், பேராசிரியர்கள், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்கள் நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# காரைதீவில் இடம்பெற்ற நாமகள் நகர் உலா!





(வி.ரி. சகாதேவராஜா )

காரைதீவு இராமகிருஷ்ண பெண்கள் வித்தியாலயத்தின் நாமகள் நகர் உலா இன்று (09) புதன்கிழமை காலை நடைபெற்றது.

# மகான் சீரடி சாயி பாபா மகா சமாதி தின விழா!!



“எவன் என்னுடைய திருவடிகளை அடைகின்றானோ! அவனுடைய அத்தனை எண்ணங்களையும் ஈடேற்றுவேன் !! என்னை எந்த உருவத்தில் பக்தன் பார்க்க விரும்புகிறானோ! அதே உருவத்தில் அவனுக்கு காட்சியளிப்பேன்!! எவன் என்னை அடைக்கலம் அடைகின்றானோ! அவன் பாரத்தை நான் சுமக்கின்றேன் !! அவன் தன் உடல், மனம், தனம், செய்கைகளை எனக்கே அர்ப்பணித்து என்னைத் தியானம் செய்கின்றானோ! எவன் தன் துன்பங்களை என்னிடம் ஒப்புவிக்கின்றானோ! எவன் சாயி நாமத்தைத் தினமும் ஜெபிக்கின்றானோ! அவன் பேத, பாவங்களில் இருந்து விடுபட்டு என்னையே அடைகின்றான்!!!!” என்று சீரடி சாயி பாபா கூறிய உறுதிமொழியில், உண்மையை உணர்ந்த பல லட்சக்கணக்கான மக்கள் , உலகமெங்கும் வாழும் சீரடி சாயி பக்தர்கள், சீரடி ஆலயங்களைத் தேடிவ் சென்று, தஞ்சமடைந்து வருவதை பார்க்க முடிகிறது. அதற்கு உதாரணம் பல சீரடி ஆலயங்கள், உலகமெங்கும் புதிது புதிதாக எழுச்சிபெற்றுக் கொண்டிருக்கன்றன. இவர் எந்த மதத்தைச் சார்ந்தவர், எந்த மதத்தைப் பின்பற்றினார் என்பதனை, மற்ற மகான்களைப் போல் சுலபமாக விடை சொல்லமுடியாது. இவர் அனைத்து மதங்களுக்கும் உரித்துடையவர். எந்த மதத்தையும் பற்றிய மாற்றுக் கருத்துகள் இவரிடம் கிடையாது. அதனால்தான் உலக மக்களில் பலர் இனம், மொழி, மதம், சாதி என்று பாராது, சீரடி சாயி பக்தர்களாக இருக்கிறார்கள் . இவரிடம் ஒரு அற்புதம் இருக்கிறது. அதாவது தனது பக்தனை தேர்ந்தெடுப்பதும் அவரேதான் !! அதேசமயத்தில் அவரை வழிபடும் பாக்கியமும் , இலகுவாகக் கிட்டி விடாது! ஒரு சிலருக்கு



திருமதி
தேச. மங்கையர்க்கரசி

சிறுவயதிலேயே அந்தப்பாக்கியம் அமைவதும், ஒரு சிலருக்கு அந்தப்பாக்கியம் காலம் கடந்து அமை வதும், ஒரு சிலருக்கு அப்பாக்கியம் அமையாது போவதும் அவரவரது பூர்வ புண்ணியத்தின் பலனேயாகும். அது போன்றுதான் இன்றும், அவரது சமாதியிருக்கும் சீரடி மண்ணை, நாம் நினைத்தவுடன் சென்று நமது காலடிகளை வைத்துவிடமுடியாது. இது பற்றி சீரடி சாயி பாபா தன் பக்தனிடம் கூறிய ஒரு செய்தி, “அதோ அந்த மாமரத்தைப் பார். ஆயிரக்கணக்கில் பூத்து நிற்கிறது. இவை ஒன்றுகூட விடாமல் காயாகி, பிறகு கனியானால் எவ்வளவு ஆயிரம் மாம்பழங்கள் கிடைக்கும். அவ்வாறு நடக்கிறதா? ஒரு சில நூறு மாம்பழங்கள் மட்டும் கிடைக்கின்றன. ஏனென்றால், பலத்த காற்றடித்தால், தொடர்ந்து மழை பெய்தால், எவ்வளவு பூக்கள் மரத்திலிருந்து, கீழே விழுந்து விடுகின்றன? எந்தப் பூக்கள் காற்றை எதிர்த்தும், மழையை எதிர்த்தும் உறுதியாக நிற்கின்றன. அப்படி நிற்பவைதான் பின்னர் காயாகி பழமாகின்றன. அதுபோல் என்னை நோக்கி எண்ணிடலங்கா பக்தர்கள் வந்தாலும் , விடாமுயற்சியுடனும் விசுவாசத்துடனும் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருப்பவர்களுக்குத்தான் என்னுடைய முழுக்கருணையும் கிடைக்கும் என்றார்.

இலங்கையில், கொழும்பு புதுச்செட்டித்தெருவிலுள்ள, சீரடி சாயி மந்தீரில், பெருகிவரும் சீரடி சாயி பக்தர்களின் எண்ணிக்கையானது, அங்குள்ள சீரடி சாயி பாபாவின் மகிமையை, அவர்கள் தெரிந்து அறிந்து கொண்டதாகும். அதற்கு எடுத்துக்காட்டு, இலங்கையில் முதல் முதலாக சொக்கத் தங்கத்தில், 54 சவரனில் தங்க மகுடமொன்றை, விலையுயர்ந்த பச்சை மரகதக்கல் பதித்து, பக்தர்கள் தங்களது காணிக்கையாகச் சூட்டியதையும் சித்திரத்தேரில் அவரது பஞ்சலோக ஐம் பொன் விக்கிரகம் , தங்க கீரிடத்துடன், பக்தர்கள் படைசூழ பவ னிவருதையும் கூறலாம்.

இந்த சீரடி சாயி மந்திருக்கு, இன்னுமொரு சிறப்பான பெருமையும் உண்டு. அதாவது வருடாவருடம் நடைபெறும் சீரடி சாயி சொற்பொழிவு. இலங்கை மற்றும் தமிழக ஆன்மீகப் பேச்சாளர்கள் பலர், “சீரடிசாயி பாபாவின் மகிமை” என்ற தலைப்பில், முதன் முதலில் சொற்பொழிவாற்றி அரங்கேற்றிய இடமும் இதுவாகும். கம்பவாரி ஜெயராஜ், சுகிசிவம், திருமதி சௌமீயா அபிஷேக்ராஜ் என்ற வரிசையில், இந்த வருடம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மாலை 6 மணிக்கு, இதே சீரடி மந்திரில், இலங்கையில் முதன் முதலாகச் சீரடி சாயி பாபாவைப் பற்றி, கிருபானந்த வாரியார் சுவாமிகளின் வாரிசு, கலைமாமணி, பிரபலமான ஆன்மீகச் சொற்பொழிவாளர் திருமதி தேச. மங்கையர்க்கரசியின் ஆன்மீக உரையாகும்.

அத்துடன் எமது சீரடி மந்திரில், முதல்முறையாக, சீரடி சாயி பாபாவைப் பற்றிக் கதாபிரசங்கம் அரங்கேற்றிய, பிரபலம்மிக்க இசைக் குடும்பமான, “இசை அர்ச்சனை” குழுவினரான பிரம்மஸ்ரீ ஏ.சி.எஸ். சுவாமிநாதன் சர்மா, ஆன்மீக இசை விருந்து, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை, மாலை 6 மணிக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு நிகழ்வாக, கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்திலுள்ள சாயி நிலையத்துக்கும் சீரடி சாயி மந்திருக்கும் “சூரிய மின்சக்தி இணைப்பு” அங்குரார்ப்பணம் நடைபெறவுள்ளது.

சீரடி சாயி பாபா மகாசாதி தின நிகழ்வுகள், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள, சீரடி சாயி மந்திரில், விஜயதசமி நன்நாளை முன்னிட்டு நாளை 10ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

தினமும் நான்கு கால ஆராத்தி, சாயி பஜனை, பூஜை, சாயி பல்லக்கு, அத்துடன் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை, விஜயதசமியன்று ரூத்ரா யாக பூஜையுடன் தங்க மகுடாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. மாலை 6 மணிக்கு சீரடி சாயி சித்திரத் தேரோட்டம் இடம்பெறும்.

**எஸ்.என்.உதயநாயகம்,**
சீரடி சாயி மத்திய நிலையம்,
இலங்கை.

# குழந்தைகள் படிப்பில் சிறக்க

# சரஸ்வதியை வரவேற்போம்!

ஆண்டு தோறும் புரட்டாசி மாதத்தில் ஒன்பது நாள்கள் அன்னை பராசக்தியை வீடுகளிலும், ஆலயங்களிலும் பூஜை செய்து வழிபடுவது நவராத்திரி விழா. தக்ஷிணாயன புண்ய காலத்தில் நவக்கிரகங்களில் நாயகமாக உள்ள சூரியன், புரட்டாசி மாதத்தில் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலம் தேவர்களுக்கு இராக்காலமாகும். கன்னி ராசிக்கு அதிபதியானவன் புதன். வித்யாகாரகன் எனப்படுபவன். கல்வி, புத்தி, தொழில் ஸ்தானம் சரியாக அமைய புதனின் பார்வைர் முக்கியமானது என்பார். இந்தக் காலத்தில் சாரதா நவராத்திரி கொண்டாடுவது

சாலச் சிறந்தது என்று கருதி வந்துள்ளனர். நவ ராத்திரியின் ஏழாம் நாள் முதல் அடுத்த மூன்று நாட்கள் சரஸ்வதி தேவிக்குரிய நாள்களாகும்.

நவராத்திரியில் வரும் மூல நக்ஷத்திரத்தில் சரஸ்வதி தேவியை ஆவாஹனம் செய்வது விஷேடமாகும்.

நவராத்திரி பண்டிகை நாளில் ஒன்பது நாளும் கொலு வைத்துத் பூஜை செய்ய இயலாதவர்கள் கடைசி மூன்று நாள்கள் கொலு வைத்துத் சரஸ்வதியை ஆவாஹனம் செய்து, ஆயுதபூஜை, சரஸ்வதிபூஜை, விஜயதசமி நாளில் வித்யாரம்ப பூஜை செய்து வணங்குவர்.

கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தேவியையும், நம் தொழிலுக்கும் ஜீவனத்துக்கும் உதவி செய்யும் கருவிகளையும் பூஜை செய்து வணங்கும் நாளே சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுதபூஜை நாளாகும்.

நவராத்திரி கொண்டாட்டத்தின் கடைசி மூன்று நாட்களான மஹா சப்தமி, துர்காஷ்டமி எனப்படும் மஹா அஷ்டமி மற்றும் விஜய தசமி எனப்படும் மஹா நவமி ஆகிய மூன்று நாள்களும் சரஸ்வதி தேவிக்கு உரியன.

நவராத்திரி தினங்களில் வரும் மூல நட்சத்திரமே சரஸ்வதியின் அவதார தினமாக கொண்டாடப்படுகிறது. அதன்படி இன்று சரஸ்வதியின் அவதார தினம் என்பதால் சரஸ்வதி தேவியை ஆவாஹனம் செய்து பூஜிப்பது வழக்கம். அதற்கு அடுத்த நாள்தான் இந்த ஆண்டு சரஸ்வதி பூஜையும் வருகிறது. வித்தைகளுக்கு அதிபதியாகிய சரஸ்வதி தேவியை பூஜை, ஜபம், பாராயணம் ஆகியவற்றால் ஆராதித்துத் நன்மையடைய வேண்டிய நாள் சரஸ்வதி பூஜை.

எலுமிச்சம் பழம் சாதம் பிரசாதமாகப் படைத்து, பழங்களில் பேரீச்சையும் புஷ்பங்களில் தாழம் பூவும் பத்திரங்களில் தும்மை இலைகளாலும் அர்சித்து வணங்க நல்ல கல்வி, ஞானம், வாக்கு சித்தம், தெளிவு என்பன உண்டாகி ஒரு பூரணத்துத் வம் மிக்க மனி தராகப் பிரகாசிக்க முடியும்.

பாற்கடலில் வெண் தாமரையோடும் வேதச் சுவடிக ளோடும் தோன்றிய கலைமகளை பிரம்மனே முதலில் பூஜித்துத் தனக்கு இணையாக்கிக் கொண்டார் என புராணங்கள் கூறுகின்றன. கல்வி, கலைகளின் நாய கியான சரஸ்வதியின் பெருமைகளை பலவாறு கூறுகிறது சரஸ்வதி மகாத்மியம் என்ற நூல். அஞ்ஞான இருளை நீக்கும் இந்த தேவி, எட்டுவடிவங்கள் கொண்டு அன்பர்களைக் காக்கிறாள் என்று தாரா பூஜை என்ற சாஸ்திரம் தெரிவிக்கிறது. வாகீஸ்வரி, சித்ரேஸ்வதி, துளஜா என்ற சியாமளா, கீர்த்ர் த்தீஸ்வரி, நீல சரஸ்வதி, கினிசரஸ்வதி, அந்தரிக்ஷ சரஸ்வதி, கடசரஸ்வதி என எட்டுட் சரஸ்வதி வடிவங்கள் எட்டு வித குணங்களை அளிப்பதாக தெரிவிக்கிறது.

கல்வி அறிவைத் தந்து நம்மை வல்லவர்களாக்கும் சக்தி படைத்தவள் சரஸ்வதி தேவி. கலைவாணியான



சரஸ்வதி தேவியைப் பிரதானமாகக் கருதி, ஆராதனை செய்து வணங்கும் நாள்தான் சரஸ்வதி பூஜை. நாவிற் கரசி, கல்விக்கரசி, கலைவாணி எனப் பல பெயர்களில் போற்றப்படும் சரஸ்வதி தேவியின் மகிமையை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். பிரம்மனின் துணைவியாக இருப்பவள் சரஸ்வதிதான். சரஸ் என்றால், நீர் மற்றும் ஒளி ஆகியவற்றை தடையின்றி வழங்குபவள் என்று பொருள். கல்வியை வற்றாத உற்றாகவும், ஞான ஒளியாகவும் அள்ளித்தருபவளே சரஸ்வதி. சரஸ்வதியின் கையில் இருக்கும் வீணையின் பெயர் கச்சபி. சிவபெருமானால் உருவாக்கப்பட்டுட் வழங்கப்பட் டட் து, வீணா தட்சிணாமூர்த்தியாக இருந்து, நாரதர் முதலானவர்களுக்கு இசை நுணுக்கங்களை உப தேசித்த பிறகு தனது சகோதரியான கலைவாணிக்கு அவர் அளித்ததாய் ஐதீகம்.

கல்வி கடவுளான சரஸ்வதி தேவி தான் ஆயக்க லைகள் அறுபத்துத் நான்குக்கும் தலைவியாகவும், தெய்வமாகவும் திகழ்கிறாள். சரஸ்வதி தேவியின் அருள் பெற்றவர்கள் ஆயகலைகள் அனைத்தையும் அறிந்திட முடியும் என்பதே உண்மை.

ஆயகலைகள் அறுபத்துத் நான்கு என்பதும். அதற்குரியவளான சரஸ்வதி தேவியை வணங்கிட அவை நமக்கு கிட்டிடும் என்பதும் புலனாகிறது.

சரஸ்வதிக்கு நாற்பதுக்கும் அதிகமான பெயர்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமான பெயர்கள். கலை மகள், ஞானவாகினி, தூயாள், பிராமி, இசை மடந்தை, காயத்ரி, சாரதா, வெண்டா மரையாள், ஞானக்கொழுந்து, ஆதிகாரணி, சகலகலாவல்லி, வாணி, பனுவலாட்டிட், பாமகள், பாமுதல்வி, பாரதி, நாமகள், பூரவாகினி, சாவித்ரி, ஞானஅமிலி நாமகள், கலை மங்கை , வாணி, கலை வாணி, பார்கவி, சரஸ்வதி, பாரதி, சாரதா, சகலகலா வல்லி, பிரம்மதேவி, வேத நாயகி, ராஜ மாதங்கி, நீலதாரா, சித்தாரா, சியாமளா, ராஜ சியாமளா, வாக்வாதினி, வாகதீஸ்வரி, நயவுரை நாயகி, ஞானரூபிணி, வித்யா வித்யா தாரணி ஆகியன ஆகும்.

இந்த சரஸ்வதி பூஜை நன்னாளில் கல்வி கடவுளான சரஸ்வதியை வணங்கி சரஸ்வதி யோகத்தை பெற்று கலை பல கற்று புகழுடன் விளங்குவோமாக.

- எஸ். சதானந்தசிவம்.

# கலைவாணித் தாயே காத்தருள வேண்டும்



கலையாத கல்வியும் கசடற்ற கல்வியும்
நிலையாக நிற்க நீயருள வேண்டும்
வலையாக மூடம் வழிதொடரா வண்ணம்
கலைவாணித் தாயே காத்தருள வேண்டும்!

வறுமையிற் கிடந்தாலும் வாடியே நின்றாலும்
பொறுமையுடன் கல்வியை கற்றிடுவேன் தாயே!
சபையிடையே நானும் தலைநிமிர எனக்கு
நிலையான கல்வியைத் தந்தருள்வாய் தாயே!

கல்வியைக் காசாக்கி நிற்கிறார் தாயே!
கல்வியிலே அறமதனை அழிக்கிறார் தாயே!
கல்வியது அறமாக இருக்கின்ற நிலையில்
அறமழித்து அநியாயம் செய்கின்றார் தாயே!

பட்டத்தைக் காசாக்கி விற்கிறார் தாயே!
பலகல்வி நிறுவனங்கள் பணமுழைக்க வந்திருக்கு
இட்டமுடன் கல்வியைக் காசாக்கி உழைக்கின்றார்
கொட்டமதை அடக்கிவிடு குறைவில்லா சரஸ்வதியே!

ஆசான்கள் பலபேரும் அகவொழுக்கம் தவறுகிறார்
மாசகற்றும் மாபணியை மறந்தவரும் நிற்கின்றார்
காசினியில் கற்பிப்பார் கண்ணியத்தை உணருதற்கு
கைகூப்பிக் கேட்கின்றேன் கருணைபுரி கலைவாணி!

நலந்தரும் கல்வி நாடெல்லாம் பெருகவேண்டும்
நாநில மாந்தர் நற்கல்வி பெறவேண்டும்
கசடறக் கற்று கடவுளை நினைந்து
அனைவரும் வாழ அருளிடு வாணியே!

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# அம்பாறையை 'வெத்திலை பெட்டியாக' பாவிக்கும் கலாசாரம் மாற வேண்டும்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவிப்பு

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தை 'வெத்திலை பெட்டியாக' பாவிக்கும் கலாசாரம் இந்த தேர்தலோடு மாற்றமடைய வேண்டும் அல்லது மாற்றவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் என்று அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தள்ளதாவது,

அம்பாறை மாவட்டம் முழுதும் கடந்த சில தினங்களாகச் சில பயணங்களையும் பல நண்பர்களையும் பயணங்கள் வழியே சந்திக்க நேர்ந்தது.

அதுனூடாக பெற்ற செய்திகளின் அடிப்படையில் சில தகவல்களை உங்களுடன் பகிர்கின்றேன்.

பொது தேர்தலுக்காக பல கட்சிகளும் சுயேட்சைகளும் அம்பாறைக்குள் களமிறக்கப்பட்ட நிலையில் அந்தந்தக் கட்சிகளுக்காகவும் சுயேட்சைகளுக்காகவும் களமிறக்க ஆள் பிடிக்கும் படலமும் தேடுதல்களும் பரவலாக இடம் பெற்று வருகின்றன.

அம்பாறையில் தமிழர்களுக்கென்று ஒரு ஆசனம் இலவு காத்த கிளியாக காத்திருக்கிறது. இந்த வேளையில் அம்பாறை தமிழ் மக்களின் இருப்பைத் தக்கவைக்கும் வேலைத் திட்டத்தில் ஒரே சின்னத்தின் கீழ் கொண்டு



வருவதற்கான அடிமட்ட எத்தனிப்புகளைப் பல்வேறு மட்ட சமூக அமைப்புக்கள் செய்தன.

இருந்தும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நிலை கேள்விக் குறியாக போய் நின்கின்றது. அவர்களது இருப்பையும் அவர்களின் எதிர்பார்ப்புகளையும் உணர்வுகளையும் நாடி பிடித்து அறிந்திருந்தும் தங்களது சுயநலன்களுக்காக ஆளாளுக்கு களத்தில் இறங்கியிருக்கும் நிலையை பார்க்கும்போது உண்மையில் பரிதாபமும் கோபமுமே வருகின்றது.

பெண்களின் வாக்குரிமை 52 வீதமாகத் தேர்தலில் வெற்றியாளர்களை தீர்மானிக்கும் சக்தியாக பெண்கள் இருந்தும், கட்சிக்காக உழைத்த பெண் வேட்பாளர்கள் சம அளவில் எந்த கட்சிகளுக்குள்ளும் உள்வாங்கப்பட வில்லை. ஆளுமையான தலைமைத் துவமுள்ள இளைஞர்கள் இனங்காணப் படாததும் உண்மையில் வேதனை தருகிறது.

வெறுமனே பொதுவெளியில் சமூக அமைப்புகளா தங்களை வெளிகாட்ட முனையும் பொது அமைப்புக்கள் தங்களுக்குள் பொதுவெளியில் ஒரு கொள்கையும் மறுபுறத்தே தமது கட்சி விசுவாசிகளுக்காக ஒரு கொள்கையும் வைத்து பொதுவெளியில் மக்களை ஏமாற்றி குடைபிடிப்பதுடன் வீட்டிக்குள் இருந்து செய்தி எழுதும் ஊடகவியலாளர்கள் அவர்களுக்கு ஞால்ரா அடிப்பதும் வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே ஐந்துக்கும் பத்துக்கும் ஆசைப்பட்டு அம்பாறை மாவட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவத்தையும் அவர்களது இருப்பையும் கேள்விக்குறியாக்கியிருப்பதுடன் பிரதிநிதித்துவ சந்தர்ப்பம் இல்லாமல் போகும் பட்சத்தில் தேர்தலில் குதித்த பல்வேறு தரப்பினரும் இதற்கான தீர்வு என்ன என்பதை மக்களுக்கு உறுதிமொழியாக உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்குவதும் கட்டாயமானதாகும்.

ஏனெனில் அம்பாறை மாவட்டத்தை 'வெத்திலை பெட்டியாக' பாவிக்கும் கலாசாரம் இந்த தேர்தலோடு மாற்றமடைய வேண்டும் அல்லது மாறவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.- என்றார்.



# பெண் தலைமை தாங்கும் குடும்பத்துக்கு இராணுவத்தால் வீடமைத்து அன்பளிப்பு!

(பாறுக் ஷிஹான்)

பெண் தலைமை தாங்கும் குடும்பம் ஒன்றுக்குக் கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவு முகாம் இராணுவத்தினரால் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டு உத்தியோக பூர்வமாக இன்று (09) கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்துக்கு வீடு ஒன்றை நிர்மாணித்துக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டம் இலங்கை இராணுவத்தின் 24 ஆவது காலாட்படை பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அனில் பெரேராவின் ஆலோசனைக்கமைய 241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன வழிகாட்டலில் அம்பாறை கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் கட்டளை தளபதி மேஜர் ருவான் சேனாரத்ன ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சேனைக்குடியிருப்பு -1 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த மே மாதம் இடம்பெற்றது.

இதன் பின்னர் குறித்த வீடு கணவனை இழந்து 9 வயது மகள் மற்றும் 6 வயது மகனுடன் வாழ்ந்து வந்த பயனாளியான திருமதி துரைராசா சுரேஜினிக்கு தமிழ் முஸ்லீம் தனவந்தர்களின் ஒத்துழைப்புடன் இராணுவத்தினருடைய கட்டுமான பங்களிப்புடன் அமைக்கப்பட்டது.

241 இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் தனிக பதிரட்ன மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் உள்ளிட்டோர் வீட்டுப் பெறுநருக்கான சாவியையும் வீட்டு உபயோகப் பொருள்களையும் அன்பளிப்புச் செய்தனர். அத்துடன் வீட்டு நிர்மாண பணியில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை வடக்கு ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஏ.பி.ஆர்.எஸ். சந்திர சேன, அம்பாறை - கல்முனை 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, கல்முனை வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.










# பெரிய நீலாவணையில் மதுபானசாலைக்கு எதிர்ப்புக் கூறி இன்று மக்கள் ஆர்ப்பாட்டம்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிரதேச செயலகத்தை உட்பட்ட பெரிய நீலாவணையில் ஏற்கனவே ஒரு மதுபானசாலை உள்ள நிலையில் மீண்டும் புதிதாக ஒரு மதுபானசாலை திறந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொது மக்கள் இணைந்து அஹிம்சை வழி ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இன்று (09)இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த மதுபானசாலை பாடசாலை மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக இருப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுகட்டோர் தெரிவித்தனர்.

பிரதேச செயலாளர் மற்றும் அரச அதிபர் ஆகியோர் இந்த விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஏற்கனவே ஒரு மதுபானசாலை நீண்ட நாட்களாக உள்ள நிலையில் புதிதாக ஒரு மதுபானசாலை இங்கு அவசியம் இல்லை எனவும், சிறிய கிராமமான இக் கிராமத்துக்கு இரு மதுபானசாலைகள் தேவையில்லை எனவும் இது எங்கள் சமூகத்தை சீரழிக்கவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் ஆர்ப்பாட்டதாரர்கள் தெரிவித்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உரித்தான உன்னிச்சை என்ற விலாசம் கொண்ட லேபல் பொறிக்கப்பட்ட மதுபான சாலையாக இது அம்பாரை மாவட்டத்தில் இயங்குகிறது என்றும் ஆர்ப்பாட்டதாரர்கள் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்தப் பிரதேசத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே.அதிசயராஜ் வருகை தந்த நிலையில், குறித்த மது பான சாலை உரிமையாளரிடம் தற்காலிகமாக மூடுமாறும் தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு றினார்.

மதுபான சாலையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மதுவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி மேற்கொள்வார் என்றும் உறுதி அளித்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர் .














# தமிழக மீனவர்கள் மீதான அடக்குமுறையை கண்டித்து இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம்

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் அடக்குமுறையைக் கண்டித்து, சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் பா.ம.க. சார்பில் நேற்று நடைபெற்றது.

வங்கக்கடலில் மீன் பிடிக்கச்செல்லும் தமிழக மீனவர்கள் அத்துமீறி கைது செய்யப்படுவதோடு, ஆண்டுக்கணக்கில் சிறை தண்டனை, கோடிக்கணக்கில் அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. இவற்றைக் கண்டித்து பா.ம.க. சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் இருந்து பேரணியாகச் சென்று இலங்கை தூதரகத்தை முற்றுகையிடும் நேற்று போராட்டம் நடைபெற்றது.

கட்சியின் இணை பொதுச்செயலாளர் ஏ.கே.மூர்த்தி, பொருளாளர் திலகபாமா தலைமையில் நடந்த போராட்டத்தில் கட்சியினர், பல்வேறு அமைப்புகள், மீனவர் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்ற அவர்களை தடுத்துநிறுத்திய பொலிஸார், 5 பேரைமட்டும் மனு கொடுக்க அழைத்துச் சென்றனர்.

அப்போது, செய்தியாளர்களிடம் பா.ம.க. பொருளாளர் திலகபாமா தெரிவிக்கையில்,

“இலங்கை கடற்படையினரால் 162 தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். 192 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பிடிபட்டுள்ள படகுகள் மத்திய அரசால் மானிய விலையில் வழங்கப்பட்டவை. பிரதமர் பெயரால் வழங்கிய படகுகள் இன்னொரு நாட்டில் சிறைபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இந்திய – இலங்கை மீனவர்கள் எந்தவித பிரச்சினையும் இன்றி மீன்பிடித்தனர். அதே போன்ற ஒருநிலையை மீண்டும் உருவாக்கித்தர வேண்டும். அதற்கு இரு நாட்டு பிரதிநிதிகளும் அடங்கிய குழு அமைத்து, மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் பேச்சுவார்த்தை மூலம் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும்.”– என்றார்.

# ஜம்முவில் ஒரு தொகுதியில் முதல்முறை வெற்றி: ஹரியானா மாநிலத்தில் ஆம் ஆத்மி படுதோல்வி

ஹரியானா, ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது. இதில் ஹரியானாவில் போட்டியிட்ட 89 தொகுதிகளிலும் ஆம் ஆத்மி தோல்வி அடைந்தது.

டில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில் இது அக்கட்சிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. தேசிய அளவில் எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணியில் ஆம் ஆத்மி கட்சி இடம் பெற்றுள்ளது. எனினும் ஹரியானாவில் முக்கிய கட்சியான காங்கிரஸ் ஒதுக்கிய குறைந்த தொகுதிகளை ஏற்க முடியவில்லை.

இதனால் ஆம் ஆத்மி தனித்துப் போட்டியிட்டு தோல்வி அடைந்துள்ளது. டெல்லி மற்றும் பஞ்சாபில் ஆளும் கட்சியாக இருந்தாலும் அண்டை மாநிலமான ஹரியானாவில் அக்கட்சியால் காலூன்ற முடியவில்லை. இதற்கு மாறாக ஜம்மு காஷ்மீர் பேரவை தேர்தலில் முதல் வெற்றியை ஆம்



ஆத்மி பதிவு செய்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் தோடா தொகுதியில் ஆம் ஆத்மி கட்சி வேட்பாளர் மெஹ்ராஜ் மாலிக் (வயது 36) வெற்றி பெற்றார். இவர் தனக்கு அடுத்து வந்த பாஜக வேட்பாளர் கஜய் சிங் ராணாவை சுமார் 4 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

ஜம்மு காஷ்மீரில் கடந்த 2020 இல் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மெஹ்ராஜ் மாலிக் வெற்றி பெற்று ஆம் ஆத்மி கட்சிக்கு மாநிலத்தில் முதல் வெற்றியை பெற்றுத் தந்தார். இந் நிலையில் தற்போது பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மிக்கு முதல் வெற்றியை பெற்றுத் தந்துள்ளார்.

கேஜ்ரிவால் சொந்த மாநிலமான ஹரியானாவில் ஆம் ஆத்மி முற்றிலும் தோல்வி அடைந்துள்ள நிலையில். ஜம்மு காஷ்மீரில் அதன் வெற்றி வியப்பை அளித்துள்ளது. தோடாவில் கடந்த 2014 தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளர் சக்தி ராஜ் வெற்றி பெற்றிருந்தார்.




# டியூனிசியாவின் ஜனாதிபதியாக கயிஸ் சயித் மீண்டும் தெரிவு

ஷடியூனிசியாவின் ஜனாதிபதியாக கயிஸ் சயித் தொடர்ந்து இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

90. 7 வீத வாக்குகளைப் பெற்றதன் மூலம் அவர் இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் வாக்காளர்களில் 30 வீதத்திற்கும் குறைவானவர்கள் வாக்களித்துள்ள நிலையிலே, இவர் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

2019 ஆம் ஆண்டு முதல் முறையாக ஆட்சிக்கு வந்த கயிஸ் சயித் அந்நாட்டு நாடாளுமன்றத்தைக் கலைத்து அரசியல் சாசனத்தை சீர்திருத்தம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.







# காசாவில் இடம்பெற்றதை போன்று லெபனானும் அழிவைச் சந்திக்கும்

## இஸ்ரேல் எச்சரிக்கை!

காசாவைப் போன்று லெபனானும் அழிவைச் சந்திக்குமென இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லெபனான் நீண்ட போரை எதிர்கொள்வதற்கு முன்னதாக அதனைக் காப்பாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணொளி ஊடாக லெபனான் மக்களிடம் உரையாற்றிய போதே இஸ்ரேலிய பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அத்துடன், ஹெஸ்புல்லாவை புறந்தள்ளி, காசாவில் நாம் பார்ப்பது போன்ற அழிவு மற்றும் சிரமங்கள் லெபனானில் ஏற்படுவதனை தவிர்ப்பதற்கு வலியுறுத்துமாறும் அந்த நாட்டு மக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹெஸ்புல்லாவிடம் இருந்து நாட்டை விடுவிப்பதன் மூலம் இந்தப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஹெஸ்புல்லாவுக்கு எதிராக இஸ்ரேல் தமது தரைவழித் தாக்குதல் படையினை விரிவுபடுத்தியுள்ளது.

இஸ்ரேல் ஆயிரக்கணக்கான படையினரைத் தென்மேற்கு லெபனானில் நிலைநிறுத்தியுள்ளது.

இதனிடையே, ஹெஸ்புல்லா தரப்பினர் தொடர்ந்தும் மூன்றாவது நாளாக இஸ்ரேலின் துறைமுக நகரமான ஹைஃபா மீது தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இந்த தாக்குதலில் சுமார் 12 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் 03

# கனடா முரசு

புதன்கிழமை 09/10/2024

**நோர்த் யோர்க் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி ஒருவர் பலி**

கனடாவின் நோர்த் யோர்க் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கனடாவின் ரொறன்ரோ நோர்த் யோர்க் பகுதியில் இரண்டு வாகனங்கள் மோதி கொண்ட 02






# நோர்த் யோர்க் பகுதியில் துப்பாக்கி சூடு; ஒருவர் பலி

**கனடாவில் நோர்த் யோர்க் பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.**

**திங்கள் கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச்சூட்டில் படுகாயம் அடைந்த நபர் வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.**

இந்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் பற்றிய ஆள் அடையாள விபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடவில்லை.










# இயற்பியலுக்கான நோபல் பரிசு வென்றார் ஜிப்ரி ஹின்டோன்

இந்த ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு பிரிட்டனில் பிறந்து கனடாவில் பணியாற்றும் ஜிப்ரி ஹின்டோனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இயந்திர கற்கை மற்றும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான விடயங்களை இயற்பியல் ஊடாக ஆய்வுக்கு உட்படுத்தியமை காரணமாக இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் காலை இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

ஹின்டோனுடன் இணைந்து பிரின்ட்சொன் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் ஜோன் ஹாப் ஃபீல்டுக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

ஹின்டோன் மற்றும் ஹாப்பீல்ட் ஆகியோர் இயந்திரக் கற்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு நரம்பியல் வலை அமைப்பு ஆகிய தொடர்பான முக்கிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புள்ளி விபர இயற்பியல் எண்ணக்கருக்கலை பயன்படுத்தி இந்த இருவரும் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நமது அன்றாட வாழ்வியல் விடயங்களுக்கு பயன்படுத்தக்கூடிய பல வேறு தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை இந்த ஆய்வு மூலம் முன்னெடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விமான பயணங்களை ரத்து செய்யும்போது பயணிகளுக்கு நட்ட ஈடு வழங்கவேண்டும்

## உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

கனடிய விமான பயணிகளுக்கு சார்பான வகையில் அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

விமான பயணங்கள் தாமதமாவது மற்றும் பயண பொதிகள் சேதமடைதல் ஆகியன தொடர்பில் பயணிகள் தாக்கல் செய்த வழக்கு தொடர்பில் உச்ச நீதிமன்றம் இவ்வாறு சாதக தீர்ப்பு வழங்கியுள்ளது.

சில விமான சேவை நிறுவனங்கள் கூட்டாக இணைந்து தாக்கல் செய்த மேன்முறையீட்டை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கனடிய விமான பயணிகளின் உரிமைகளை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் சில விமான சேவை நிறுவனங்கள் மேன்முறையீடு செய்திருந்தன.

எயார் கனடா, போர்ட்டர் ஏர் லைன்ஸ் உள்ளிட்ட மேலும் 16 சர்வதேச விமான நிறுவனங்கள் இந்த மேல்முறையீட்டை செய்திருந்தன.

இறுதி நேரத்தில் ரத்து செய்யப்படும் விமான பயணங்களின் போதும், பயண பொதிகள் காணாமல் போகும் சந்தர்ப்பங்களிலும் பயணிகளுக்கு கூடுதல் நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக விமான நிறுவனங்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதன்படி இறுதி நேரத்தில் பயணங்கள் ரத்து செய்யப்பட்டாலோ அல்லது விமான பயண பொதிகள் காணாமல் போனாலும் கூடுதல் நட்டையிட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றின் இந்த தீர்ப்பு கனடிய விமான பயணிகளுக்கு கிடைத்த வெற்றியாக கருதப்படுகிறது.

விமான பயணிகளின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என கனடிய போக்குவரத்து அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீதிமன்ற தீர்ப்பு ஏமாற்றம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக கனடிய விமான சேவை நிறுவன ஒன்றியம் தெரிவித்துள்ளது.



## நோர்த் யோர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

பார்க்கவே மற்றும் டான் மில்ஸ் ஆகிய வீதிகளுக்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் சிக்கி காயம் அடைந்த ஒருவரை பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மேற்படி நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



# தனக்கு துரோகம் செய்த கணவனின் சாம்பலினை சாப்பிட்ட எழுத்தாளர்

உயிரோடு இருக்கும்போது தனக்கு துரோகம் செய்த கணவனின் சாம்பலை சாப்பிட்டதாக கனேடிய எழுத்தாளர் கூறியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது .

அமெரிக்காவில் வசித்து வரும் கனேடிய எழுத்தாளர் ஜெசிகா வைட் இறந்த பாஸ்டர்ட்ஸ்கான ஒரு விதவையின் வழிகாட்டி என்ற பெயரில் எழுதியுள்ள அவரது சுயசரிதை நினைவுக் குறிப்பு புத்தகம் சமீபத்தில் வெளியானது.

அந்த புத்தகத்திலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார். அதில் தனது கணவன் சீன் வைட் தன்னை ஏமாற்றி பல பெண்களுடன் தொடர்பில் இருந்தது, அதை தான் கண்டுபிடித்தது, அவர் கடந்த 2015 இல் இறந்தபிறகு நடந்த சம்பவங்கள் உள்ளிட்டவற்றை பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் டெக்சாஸ்-கு வேலை நிமித்தமாக சென்ற கணவர் உயிரிழந்தார். நான் கணவரின் ஐ-பாட் ஐ எடுத்துக் பார்த்தேன்.

அதன்மூலம் எனது கணவன் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருந்ததும், ஆபாச விடியோக்களுக்கு அடிமையாக இருந்ததையும் கண்டுபிடித்தேன்.

வேலை இருக்கிறது வீட்டுக்கு




வர நேரமாகும் என்று என்னுடன் கூறிவந்த அவர் அங்கு உட்கார்ந்து நூற்றுக்கணக்கில் ஆபாச வீடியோக்களை டவுன்லோட் செய்து பார்த்து அதை சீரான வரிசையில் போல்டர்கள் போட்டு சேமித்து வைத்துள்ளார்.

பெண்களுடன் உல்லாசமாக இருப்பதற்கென்றே கொலோராடோவில் அபார்ட்மெண்ட் வீட்டை வாடகைக்கு எடுத்து இருந்தும் எனக்கு தெரிய வந்தது.

அவர் இறந்த துக்கம் ஒருபுறம், அவரை பற்றி தெரிந்துகொண்டதால் ஏற்பட்ட கோபமும் விரக்தியும் ஒருபுறம் என்று நான் மிகுந்த மன சஞ்சலத்தில் இருந்தேன்.

எனவே இறுதிச் சடங்கு முடிந்தவுடன் என்னிடம் தரப்பட்ட அவரது உடலின் சாம்பலை வீட்டுக்கு வந்து தோட்டத்தில் எனது வளர்ப்பு நாயின் மலத்துடன் கலந்தேன். எனது ஆத்திரம் அடங்கவில்லை. எனவே அந்த சாம்பலை சாப்பிட்டேன் என்று தெரிவித்துள்ளதுடன், அதன் சுவை எப்படி இருந்தது என்று விலாவரியாக அந்த புத்தகத்தில் எழுதியுள்ளார்.



